# 32

# பொதுச்சொத்துக்களைப் பாதுகாப்போம்

ஆகிப், இம்னான் ஆகிய இருவரும் நல்ல நண்பர்கள். படிப்பில் கெட்டிக்காரர்கள். தவறாமல் பாடசாலைக்குச் செல்வார்கள். சுகவீனம் காரணமாக ஒருநாள் இம்னான் பாடசாலைக்குச் செல்லவில்லை. தன் நண்பன் பாடசாலைக்கு வராதது ஆகிபுக்குக் கவலையாக இருந்தது. அன்று மாலை நேரம் இம்னானைப் பார்க்க அவரது வீட்டுக்கு ஆகிப் சென்றார். வீட்டின் முன் கதவு திறந்திருந்தது. ஆகிப் உள்ளே நுழையவில்லை. வாசலை விட்டு விலகி நின்று உள்ளே கேட்கும் படியாக ஸலாம் கூறினார். ஆகிபின் குரலைக் கேட்ட இம்னான் மகிழ்ச்சியுடன், வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹ்' என்று கூறிக் கொண்டே வெளியே வந்தார். நண்பனின் கையைப் பற்றிப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். இருவரும் இம்னான் படிக்கின்ற அறையில் உட்கார்ந்தனர்.

**இம்னான்** : நீங்கள் வந்தது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

**ஆகிப்** : உங்களை வகுப்பில் காணாதது பெரும் கவலையாக இருந்தது. நீங்கள் ஏன் இன்று பாடசாலைக்கு வரவில்லை?

**இம்னான்** : திடீரென்று காலையில் சுகமில்லாமல் போய்விட்டது. பின்னர் வாப்பாவுடன் பக்கத்திலுள்ள டாக்டரிடம் சென்று மருந்து எடுத்தேன். 'அல்ஹம்துலில்லாஹ்' இப்போது சுகம். நீங்கள் வந்தது நல்லது. இன்று வகுப்பில் நடந்த பாடங்களைப் பற்றி தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

**ஆகிப்** : உங்களைப் பார்ப்பதுடன் அந்த விஷயங்களையும் கதைக்கலாம் என்றுதான் வந்தேன். வழமை போல பாடங்களெல்லாம் நடைபெற்றன. இஸ்லாம் பாட 'சேர்' பொதுச் சொத்துக்களைப் பற்றி படிப்பித்தது மிகவும் சிறப்பாக இருந்தது.

**இம்னான்** : 'சேர்' அப்படி என்ன விசேஷமாகப் படிப்பித்தார்?

**ஆகிப்** : பொதுச் சொத்தை அமானிதமாகவும் பொறுப்புடனும் பாதுகாக்க வேண்டும் என்பதை விளக்குவதற்காக, அபூபக்ர் (ரழி) அவர்களின் சம்பவமொன்றைக் கூறினார். இது வெறும் கதையல்ல; உண்மையான இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவம்.

**இம்னான்** : அதைச் சொல்லுங்க ஆகிப். வரலாற்றுச் சம்பவங்கள், நபிமார்கள், ஸஹாபாக்களின் சரிதைகள் கேட்பதில் எனக்கு மிகவும் விருப்பம் என்பது உங்களுக்குத் தெரியும் தானே!

**ஆகிப்** : எனக்கும் விருப்பம்தான். அதுதான் நான் மிகவும் அக்கறையுடன் சேர் சொன்ன சம்பவத்தைக் கேட்டேன். உங்களுக்கு அதைச் சொல்ல வேண்டும் என்று அப்போதே எண்ணினேன். இங்கு வந்தது நல்ல சந்தர்ப்பமாக ஆகிவிட்டது.

**இம்னான்** : நல்லது; சொல்லுங்கள்.

**ஆகிப்** : அல்ஹம்துலில்லாஹ்' உங்களுக்கு நல்ல விஷயங்களைக் கேட்பதிலும் படிப்பதிலும் இருக்கின்ற ஆர்வத்தைக் கண்டு பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. முஸ்லிம் மாணவர்களாகிய நாம் இப்படித்தான் இருக்க வேண்டும்.

**இம்னான்** : நன்றி ஆகிப். நல்ல விஷயங்களைக் கேட்கவும், நன்றாகப் படிக்கவும் அல்லாஹ் உதவி புரிய வேண்டும்.

**ஆகிப்** : இப்போது அந்த சம்பவத்தைச் சொல்லுகின்றேன். கேளுங்கள். ''நபி r அவர்களின் வபாத்துக்குப் பின்னர் அபூபக்ர் ஸித்தீக் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். அவருக்கு ஊதியமாக கோடை காலத்தில் இரு சோடி துணிகளும் மாரி காலத்தில் இரு போர்வைகளும் வழங்கப்பட வேண்டும்; அவருடைய குடும்பத்தாரின் உணவுக்கான செலவுத் தொகை தினமும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு முஸ்லிம்களின் முக்கிய தலைவர்கள் முடிவெடுத்தனர்.

கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களும் இந்த முடிவை ஏற்றுக் கொண்டார்கள். அத்துடன் தனக்கு உரிமையான சொத்துக்கள் அனைத்தையும் பைத்துல் மாலில் ஒப்படைத்து விட்டார்கள். அப்படிச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லாவிட்டாலும் கூட, தனக்கு சொத்துக்கள் இருக்கும்போது பொதுச் சொத்தைப் பயன்படுத்துவது தனது நேர்மையைக் குலைக்கும் செயலாகலாம் என்பதால் அபூபக்ர் (ரழி) அவர்கள் அவ்வாறு முடிவெடுத்தார்கள். நிருவாக விடயத்தில் முழுமையாக கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதால் தன்னுடைய வழமையான வியாபாரத்தையும் நிறுத்திக் கொண்டார்கள். அரசாங்கம் வழங்கிய சிறிய வீட்டில் குடிபுகுந்தார்கள். அரசு வழங்கிய சம்பளம் மிக எளிமையாகவும் வாழ்வதற்கு மாத்திரமே போதுமானதாகவும் இருந்தது. எனினும், அவர்கள் அதனைக் கொண்டு தன் குடும்பத்தாருடன் திருப்தியாக வாழ்ந்து வந்தார்கள். ஊதியம் பற்றியோ வசதி வாய்ப்புக்கள் பற்றியோ அவர்களிடம் கவலையிருக்கவில்லை. ஆட்சிப் பொறுப்பை அமானிதமாகவும் நேர்மையாகவும் செய்ய வேண்டும் என்பதிலேயே அவர்களின் முழுக் கவனமும் இருந்தது.

வழமை போல ஒருநாள் மனைவி உணவு பரிமாறினார். உணவுடன் சேர்த்து இனிப்பு பலகாரமும் வைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அபூபக்ர் (ரழி) அவர்களின் புருவங்கள் வியப்பால் உயர்ந்தன. அதைப் பற்றி மனைவியிடம் விசாரித்தார்கள். ''இனிப்பு செய்வதற்கான பணம் எப்படிக் கிடைத்தது'' என்று கேட்டார்கள். ''குடும்பச் செலவுக்காக பைத்துல் மாலிலிருந்து

வழங்கப்பட்ட பணத்திலிருந்து சிறுக... சிறுக.. சேமித்து, அதன் மூலம் இந்த இனிப்பைச் செய்தேன்'' என்று அவ்வம்மையார் நாணத்துடன் கூறினார். தன் கணவர் தன்னைப் பாராட்டுவார், தன் செயலைப் போற்றுவார் என்ற பெண்ணின் இயல்பான நாணமே அது.

ஆனால் அங்கு நடந்ததோ வேறு.

தன் மனைவியின் பதிலைக் கேட்டு அபூபக்ர் அவர்கள் திடுக்கிட்டார்கள். பதற்றத்துடன், 'என்ன...? நமக்கு அளிக்கப்படும் மக்கள் பணத்திலிருந்து மிச்சப்படுத்தி செய்த இனிப்புப் பண்டமா இது? நாம் இன்னும் வசதியுடன் வாழ்ந்து வருகின்றோம் போலிருக்கின்றது. நமது தேவைக்கு அதிகமாக அரச பணம் கிடைப்பதையே இது புலப்படுத்துகின்றது'' என்றார்கள். உடனே திறைசேரி அதிகாரிக்கு தனது ஊதியத்தைக் குறைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். ஊதியத்திலிருந்து குறித்த தொகை கழிக்கப்படுகின்றது. இதனால் கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் அமைதியடைந்தார்கள். சுமார் இரண்டு ஆண்டு வரை மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றிய கலீபா ஒருநாள் நோயுற்றார்.

மரணத் தறுவாயில் தனது மனைவி மக்களை அழைத்து ''இதுவரையும் நாம் பயன்படுத்திய பைதுல் மால் பணம் எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்'' என்றார்கள். பிள்ளைகள் தொகையை கணக்கிட்டுக் கூறினார்கள்.

''பிள்ளைகளே! நான் மரணித்த பின்னர் என்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிடுங்கள். நாம் பயன்படுத்திய மக்கள் பணத்தை அதிலிருந்து எடுத்து பைத்துல் மாலுக்கு திருப்பிவிடுங்கள். ஒவ்வொரு நாணயமும் இதன் மூலம் திருப்பி செலுத்தப்பட வேண்டும்'' என்று கூறினார்கள். அவர்களின் விருப்பம் பூர்த்தி செய்யப்பட்டது.

கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் வபாத்தான பின்னர் கிலாபத் பதவியைப் பொறுப்பேற்ற உமர் (ரழி) அவர்களிடம், அபூபக்ர் (ரழி) அவர்களின் கோரிக்கை தெரிவிக்கப்பட்டது.

அதைக் கேட்டு உமர் (ரழி) அவர்கள் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார்கள்.

ஓ....! அபூபக்ரே! உங்களுக்குப் பின்னால் வரும் எவரும் பின்பற்றத்தக்க ஒரு நல்ல முன்மாதிரியை உருவாக்கி விட்டுச் சென்றீர்களே..! என அழுதவாறே கூறினார்கள்.

**இம்னான்** : நீங்கள் சொல்லவதைக் கேட்டபோது உடலெல்லாம் புல்லரிக்கின்றது. பொதுச் சொத்துக்கள் விடயத்தில் எமது முன்னோர்கள் எவ்வளவு பொறுப்புடன் நடந்துள்ளார்கள். இதுபோன்ற விடயங்களால்தான் அபூபக்ர் (ரழி) அவர்கள், நேர்வழி நடந்த கலீபாக்களில் ஒருவராகக் கணிக்கப்படுகிறார்கள் போலும்.

**ஆகிப்** : உண்மைதான் இம்னான். அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பும் அச்சமும், அத்தோடு நபி ﷺ அவர்களது முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவர்களை அந்த நிலைக்கு உயர்த்தி விட்டது.

**இம்னான்** : ‘பிற்கால முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம் அவர்கள் குர்ஆனையும் நபிவழியையும் விட்டு தூரமாகியதுதான். அவர்கள் தமது இச்சையைப் பின்பற்றி உலகத்தை அனுபவிக்க முற்பட்டார்கள். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களில் துஷ்பிரயோகம் செய்தார்கள். பொதுச் சொத்துக்களை தமது தேவைக்காகப் பயன்படுத்தினார்கள்.

**ஆகிப்** : ஆம், இம்னான் இவை பற்றி சேர் நல்ல விளக்கம் தந்தார்.

**இம்னான்** : அதனையும் சொல்லுங்கள்.

**ஆகிப்** : தனிமனிதர்களினால் அல்லது குழுக்களினால் வக்பு செய்யப்பட்ட சொத்துக்களும், அரசுக்குச் சொந்தமான எல்லாச் சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன. பாடசாலை, நூல்நிலையம், பல்கலைக்கழகம், மத்ரஸாக்கள், மஸ்ஜிதுகள், மதவழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் என்பன பொது சொத்துக்களாகும்.

**இம்னான்** : இவை மாத்திரம்தான் பொதுச் சொத்துக்களா?

**ஆகிப்** : இல்லை. நமது வகுப்பிலுள்ள இர்பான் இதே கேள்வியை சேரிடம் கேட்டார். அதற்கு அவர், இன்னும் பலவற்றைப் பொதுச் சொத்துக்கள் என்று அறிமுகப்படுத்தினார்.



**இம்னான்** : அவற்றையும் சொல்லுங்கள்.

**ஆகிப்** : பாதைகள், கிணறுகள், கடற்கரை, நீர்வீழ்ச்சி, பூங்கா, பஸ்தரிப்பிடம், ஆறுகள், பொதுக் கழிவறைகள், போக்குவரத்து சாதனங்கள், மையவாடிகள், விளையாட்டு மைதானம் என்பனவும் பொதுச் சொத்துக்கள் எனக் குறிப்பிட்டார்.

**இம்னான்** : பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் பற்றி சேர் எதுவும் சொன்னாரா?

**ஆகிப்** : ஆம், பொதுச் சொத்துக்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் ஈமான், இபாதத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களாகும் எனக் கூறினார். இதற்காக ''நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றியமை பற்றி விசாரிக்கப்படுவீர்கள் என்ற நபிமொழியைக் கூறினார்.

**இம்னான்** : அப்படியானால், எமது பாடசாலை, வகுப்பறை, மஸ்ஜித், நாம் போக்குவரத்துச் செய்யும் பாதைகள், குளிக்கும் கிணறுகள், உபயோகிக்கும் பஸ், புகைவண்டிகள் போன்ற அனைத்துக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்லவா?

**ஆகிப்** : நிச்சயமாக, இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இவற்றின் முக்கியத்துவத்தை விளங்காததன் காரணமாகத்தான் பாடசாலை உபகரணத்துக்கு நாம் சேதம் விளைவிக்கின்றோம். பள்ளிவாசலுக்குப் போனால் வுழூச் செய்யும்போது தண்ணீரை வீணாக்குகின்றோம். பொதுமக்கள் பயணம் செய்யும் பாதைகளை எமது சொந்த இடங்கள் போல கருதி அவற்றில் விளையாடுகின்றோம். எமது மேசைகளையும் கதிரைகளையும் மற்றும் சுவர்களையும் பாருங்கள். எமது பெயர், விலாசம் இன்னும் எத்தனையோ விடயங்களையெல்லாம் எழுதி வைக்கின்றோம்.

**இம்னான்** : நீங்கள் சொல்லும் போதுதான் இவற்றின் தீமை எனக்கு விளங்குகின்றது. இவை அல்லாஹ்வின் கோபத்தையும் சமூகத்தின் வெறுப்பையும் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனைத் தடுக்க நாம் என்ன செய்யலாம்.

**ஆகிப்** : நல்ல ஒரு கேள்வியைக் கேட்டீர்கள். இதனைப் பற்றியும் சேர் சொன்னார். எமது வகுப்புத் தோழர்கள், நண்பர்கள், எமது அயலில் வசிப்போர் என்பவர்களுக்குப் பொதுச் சொத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் நாம் சிறிய கலந்துரையாடலை நடாத்தலாம். பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்களைக் கண்டால் அன்பாகவும் பக்குவமாகவும் அதன் தீமையை சுட்டிக் காட்டலாம்.

**இம்னான்** : இது நல்ல ஆலோசனை. இதன் மூலம் அல்லாஹ்வின் அன்பு கிடைக்கும். மனிதர்களிடம் நல்லெண்ணம் வரும். சமூகத்துக்குப் பயன் கிடைக்கும். அடுத்த சந்ததிக்கு பொதுச் சொத்துக்களின் பயனை அனுபவிக்கும் சந்தர்ப்பம் உண்டாகும்.

**ஆகிப்** : ஆமாம் இம்னான். சுருக்கமாகச் சொல்வதானால், பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பது மாபெரும் தர்மம். மறுமையில் நற்கூலியைப் பெற்றுத் தரவல்லது. அத்தோடு ஒரு சிறந்த சமூக சேவையுமாகும்.

**இம்னான்** : உங்கள் வருகை மூலம் மிகப் பயனுள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளவும், கலந்துரையாடவும் வாய்ப்புக் கிடைத்தது. ஜஸாகல்லாஹு கைரா.

**பயிற்சி:**

1. உமது பகுதியிலுள்ள பொதுச் சொத்துக்களை அட்டவணைப்படுத்துக.
2. பின்வரும் பொதுச் சொத்துக்கள் எவ்வாறு சேதப்படுத்தப்படுகின்றன/ துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதை விளக்கி ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணம் தருக.

பாதை

1.

2.

வகுப்பறை

1.

2.

வுழூ செய்யும் இடம்

1.

2.

பாதையோர கழிவு நீர்க்கான்

1.

2.